# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1900/13 - 2015 පෙබරවාරි මස 06 වැනි සිකුරාදා - 2015.02.06

*1900/13 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல. : 3/கடா/இ.அத்/89

காணி அமைச்சின் குறிப்பு இல. : 4-3/7/2014/எச்டபிள்யூ/36

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில், கம்பஹா மாவட்டத்தில், கடான பிரதேச செயலாளர் பிரிவில், துககஹ பத்துவ சிறிய பிரிவில், பிரிவு இல 67 -ஏ மானாவேரிய கிராம அலுவலர் பிரிவில், மானாவேரிய கிராமத்தில் நில அளவை அதிபதி சார்பாக மாவட்ட நில அளவை அத்தியட்சகரின் மூலம் 29.12.2014ஆம் திகதி சரிசெய்யப்பட்ட இல - கிரா. 3938 ஆரம்ப வரைபடத்தில் காணித் துண்டுகளில் தொ.இல 1முதல் 5 வரை காட்டப்படும் 0.2806 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணி துண்டுகள் (5) :

**1. துண்டு இல. 01**

காணியின் பெயர் : பிரிஜ்லேன்வத்தை; காணியின் விபரம் : தற்காலிகக் கட்டிடம் மற்றும் தற்காலிகக் கட்டிடத்தின் பகுதி ஒன்றுள்ளது; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : டி.ஆர். ஆறுவில, இல 65/1, அலாவத்தை வீதி, மானாவேரிய, கொச்சிக்கடை; விஸ்தீரணம்: 0.0348 ஹெக்டயார்.

**2. துண்டு இல. 02**

காணியின் பெயர் : பிரிஜ்லேன்வத்தை; காணியின் விபரம் : நிரந்தரக் கட்டிடங்களின் 3பகுதி , சீமெந்தினால் கட்டப்பட்ட கிணறு ஒன்றுடன் 30 வருடங்கள் பழமை வாய்ந்த தென்னை மரங்கள் 8 மற்றும் 30 வருடங்கள் பழமை வாய்ந்த பலா மரங்கள் 4உம் உள்ளது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர் : டி.பீ.ஏ.பீ.ஜயவர்தன, இல 153, அலாவத்தை வீதி, மானாவேரிய, கொச்சிக்கடை; விஸ்தீரணம்: 0.1045 ஹெக்டயார்.

**3. துண்டு இல. 03**

காணியின் பெயர் : பிரிஜ்லேன்வத்தை; காணியின் விபரம்: வீட்டுத் தோட்டம், நிரந்தரக் கட்டிடம், நிரந்தரக் கட்டிடத்தின் பகுதி, தற்காலிக கட்டிடம் ஒன்றுடன் 30 வருடங்கள் பழமை வாய்ந்த தென்னை மரங்கள் 3 மற்றும் 30 வருடங்கள் பழமை வாய்ந்த பலா மரம் ஒன்றும் உள்ளது; உரிமை கோருபவர்: அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : கே.வி.ஜயவர்தன, அலாவத்தை வீதி, மானாவேரிய, கொச்சிக்கடை; விஸ்தீரணம்: 0.0833 ஹெக்டயார்.

**4. துண்டு இல. 04**

காணியின் பெயர் : கொஸ்கஹவத்தை; காணியின் விபரம் : நிரந்தர கட்டிடம் ஒன்று மற்றும் 30 வருடங்கள் பழமை வாய்ந்த பலா மரம் ஒன்றும் 30 வருடங்கள் பழமை வாய்ந்த தேக்க மரமொன்றும் மற்றும் 30 வருடங்கள் பழமை வாய்ந்த தென்னை மரம் ஒன்றும் உள்ளது; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: ஜி.டீ.பிரணாந்து, இல 154, அலாவத்தை வீதி, மானாவேரிய, கொச்சிக்கடை; விஸ்தீரணம்: 0.0366 ஹெக்டயார்.

**5. துண்டு இல. 05**

காணியின் பெயர் : கொஸ்கஹவத்தை; காணியின் விபரம் : தோட்டம், 30 வருடங்கள் பழமை வாய்ந்த பலா மரம் ஒன்றுள்ளது; உரிமை கோருபவர் : அரசு ; ஆரம்ப உரிமை கோருபவர் : துஷானி சமரசிங்க, இல 105, அலாவத்தை வீதி, மானாவேரிய, கொச்சிக்கடை; விஸ்தீரணம்: 0.0214 ஹெக்டயார்.



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2015ஆம் ஆண்டு மாச்சு மாதம் 04ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு கட்டான பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தவும். அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2015 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கே.ஜி.எச்.எச்.ஆர். கிரிஎல்ல,
பிரதேச செயலாளர்,
கட்டான.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கட்டான,
2015, பெப்புருவரி 05.

02-564

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: நுவ/3/1/8/கா.எ/2792/225

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் இல.: LD/05/2010/HW/143/D

2012.07.24 ஆந் திகதிய 1768/15 இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் 6ஏ பக்கத்தில் தொடர் இல. 94 க்கு உரிய துண்டு இல. 229 இல் விஸ்தீரணம் 0.0001 ஹெக்டயாரருக்கு பதிலாக 0.0026 ஹெக்டயார் என் இத்தால் திருத்தம் செய்கிறேன்.

எஸ். பீ. கே. போதிமான்ன,
பிரதேச சொலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2015, சனவரி 30.

2-584

---

## திருத்தம்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல: நுவ/3/1/8/கா.எ/2775/03

காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சின் இல: LD/05/2010/HW/147/H

2012.07.24 ஆந் திகதிய 1768/15 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் 10A பக்கத்தில் தொடர் இல. 16 க்கு உரிய துண்டு இல. 29 இல் விஸ்தீரணம் 0.029 ஹெக்டயாருக்கு பதிலாக 0.0029 ஹெக்டயார் எனவும் தொடர் இல 17 க்கு உரிய துண்டு இல. 30 இல் விஸ்தீரணம் 0.015 ஹெக்டயாருக்கு பதிலாக 0.0015 ஹெக்டயார் எனவும் தொடர் இல. 18 க்கு உரிய துண்டு இல. 31 இல் விஸ்தீரணம் 0.013 ஹெக்டயாருக்கு பதிலாக 0.0013 ஹெக்டயார் எனவும் இத்தால் திருத்தம் செய்கிறேன்.

எஸ். பீ. கே. போதிமான்ன,
பிரதேச சொலாளர்,
நுவரெலியா.

பிரதேச செயலகம்,
நுவரெலியா,
2015, சனவரி 30.

2-585